

தனி பிரதி
ரூ.10/-

PORIYIYAL KADHIR



# பொறியியல் கதிர்

கதிர் 45 | பாரிப்பு 7 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மார்ச் 2014



சரித்திர புகழ் பெற்ற கல்லணையை கட்டிய கரிகால் சோழனுக்கு மணிமண்டபம் அமைத்து சரித்திர சாதனை படைத்த

## மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா

அவர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

நூற்றாண்டு விழா சங்கம்

தோற்றம்
1910


தமிழ்நாடு பொறியியல் சங்கம்
TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD

நூற்றாண்டு
2010

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை – 5.
அரசு ஆணை எண்.Ms.822 நாள்: 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது.

## 01.02.2014 அன்று விருதுநகரில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்









## 01.02.2014 அன்று விருதுநகரில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்









பொதுச் செயலாளர் மடல்

மடல் – 7(2013-2014)

# தொடரும் நம் பயணம்......



## அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

உதவி செயற்பொறியாளர் (சிவில்) பதவி உயர்வு ஆணை 169 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக்கொள்கிறது.

169 பொறியாளர்களுக்கு பணியமர்வு வழங்கும் அளவுக்கு துறையில் உதவி செயற்பொறியாளர்கள் காலி பணியிடங்கள் இல்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இந்த 169 எண்ணிக்கை என்பது விடை (Answer) எழுதிவிட்டு கணக்கு (Sum-Problem) போடுவது போன்று உருவாக்கப்பட்ட எண்ணிக்கை. இருந்தாலும் தேவையற்ற சர்ச்சையை உருவாக்க வேண்டாம் என தமிழ்நாடு பொறியியல் சங்கம் கருதுகிறது.

இந்த பதவி உயர்வு பட்டியலில் முதுநிலை எண்: 155 மற்றும் 167 ல் உள்ள திரு.A.டேவிட் அன்பழகன், திரு. S.ராஜகோபால் இருவரும் வருகிற ஏப்ரல் 2014 ல் பணி ஓய்வு பெற இருக்கிறார்கள். இந்த இருவருக்கும் அவர்கள் பணி ஓய்வு பெறுவதற்கு முன்பு மறுபணி அமர்வு ஆணை வழங்க கோரினோம். ஆனால் காலிப்பணியிடம் இல்லை எனவே வாய்ப்பு இல்லை என கூறி மறுத்துவிட்டார்கள். காலிப்பணியிடம் இல்லாத சூழ்நிலையில் எதற்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று தெரியவில்லை. மேற்கண்ட இருவருக்கும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாத ஒரு சூழ்நிலை. இது மிகவும் வருத்தத்துக்குரிய ஒரு செயலாகும். சுமார் 80 உதவி செயற்பொறியாளர் காலிப்பணியிடங்கள் மட்டும் உள்ளதாக தெரியவருகிறது.

மின்னியல் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் கருத்துரு அரசுக்கு அனுப்ப வலியுறுத்தினோம். இதற்கு முந்தைய உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில், பதவி உயர்வு பெற்ற ஒருவருக்கு மறுபணி அமர்வு ஆணை வழங்கப்படாமல் இருந்தது. அவருக்கு மறுபணி அமர்வு ஆணை வழங்கிய பிறகே மின்னியல் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் கருத்துரு அரசுக்கு அனுப்ப முடியும் என்று முதன்மை தலைமைப் பொறியாளர் தெரிவித்திருந்தார். அந்த ஒருவருக்கு மறுபணி அமர்வு வழங்கப்பட்டுவிட்டது.

இளநிலைப் பொறியாளர் பணிவரன் முறை பட்டியலில் விடுபட்டு போனவர்களில் 9 பேர்களுக்கு Revised Probation ஆணை வழங்கி மீண்டும் கருத்துரு அனுப்ப வலியுறுத்தி முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருந்து உரிய கோட்ட

அலுவலகங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது சம்பந்தப்பட்ட இளநிலைப் பொறியாளர்கள் உடனடியாக பதில் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறோம். விடுபட்டுப்போன, மீதமுள்ளவர்களை பணிவரன் முறை செய்ய சங்கத்தின் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு ஆணை எண்: 1 பொ.ப.து. நாள்: 02.01.1990ன் படி 2000 ம் ஆண்டு முதல் 2003 ம் ஆண்டு வரை உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற 16 பேர்களை பணிவரன்முறை செய்ய கருத்துரு கோரப்பட்டிருந்தது. திரு.அன்பழகன் உதவிப் பொறியாளர் அவர்களின் கருத்துரு வந்து சேர்வதில் தாமதம் ஆகிக்கொண்டு இருந்தது. தற்போது அதுவும் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்துவிட்டது. எனவே விரைவில் அவர்களுக்கு பணிவரன்முறை ஆணை பெற்றுத்தர சங்கம் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

பொறியாளர்களின் ஊதிய குறைப்பு அரசு ஆணை சம்பந்தமான வழக்கில் 27.02.2014 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி ஓய்வு பெற்ற நீதியரசர் A.S.வெங்கடாசலமூர்த்தி அவர்கள் தலைமையில் ஒரு IAS அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகளை கொண்டு ஒரு கமிட்டி அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதுவரையில் ஊதிய குறைப்பு அரசு ஆணைகளை (அரசு ஆணை எண்: 71 நிதித் (ஊதிய) துறை, நாள்: 26.02.2011, அரசு ஆணை எண்: 242 நிதித் (ஊதிய) துறை, நாள்: 22.07.2014) அமுல்படுத்த கூடாது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று தெரியவில்லை.

மத்திய அரசு ஓய்வு பெறும் வயதை 62 ஆக உயர்த்துதல், 50 சதவிகித அகவிலைபடியை அடிப்படை ஊதியத்துடன் சேர்த்தல், 10 சதவிகித அகவிலைபடி 01.01.2014 முதல் வழங்குதல் உள்ளிட்டவைகளை நாடாளுமன்ற தேர்தலுக்கு முன் அறிவிக்க இருப்பதாக தெரியவருகிறது.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்**

பொதுச்செயலாளர்

**D. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் **9444 999 588**, **9281 309 688**
**E.mail: d.murugavelsivan@gmail.com**

# 01.02.2014 அன்று விருதுநகரில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 01.02.2014 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் விருதுநகர் பொறியியல் இல்லத்தில் மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தலைமையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் கே.கமால்தீன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். விருதுநகர் கிளை சார்பாக கிளைத் தலைவர் பொறியாளர் ஏ.ராமசுப்பு அவர்களும், மையச் சங்கம் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் கே.கமால்தீன் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ்.கௌரிசங்கர் அவர்கள் தன்னுடைய உரையில் நூற்றாண்டு விழா தேதி குறித்து இன்று இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கூறினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும், விருதுநகர் கிளை சார்பில் பொன்னாடைகள் அணிவித்து கௌரவித்தனர்.

சென்ற மையச் செயற்குழுக் கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் தற்போதைய நிலை குறித்து அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் கே.கமால்தீன் அவர்கள் அவைக்கு தெரிவித்து ஒப்புதல் பெற்றார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார். இளநிலைப் பொறியாளர்களின் ஊதிய முரண்பாடு, 169 நபர்களுக்கு உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு, இளநிலைப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் பணிவரன்முறை, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலைப் பொறியாளர்களை தேர்வு செய்வது, அரசாணை எண்.66, அரசாணை எண்.124, பணியிடை காலம் பிழை பொறுத்தல் கோப்பு, பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு, விதித்திருத்தம் (Amendment) உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

1997ம் ஆண்டில் இருந்து, ஊட்டு பதவியில் இருந்து பதவி உயர்வு பெற்ற இளநிலை பொறியாளர்கள் 166 பேர்களுக்கு கடந்த 30.01.2014 அன்று பணிவரன்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்தார். கடந்த மாதம் 7 பேர்களுக்கு பணிவரன்முறை ஆணை வழங்கப்பட்டு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் சேர்க்கப்பட்டார்கள் என்றும் முதற்கட்டமாக மொத்தம் 173 இளநிலை பொறியாளர்கள் பணிவரன்முறை (Regularisation) செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் மீதமுள்ள சுமார் 140 பேர் இரண்டு மாதங்களில் பணிவரன்முறை செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

உறுப்பினர்கள் கருத்துகள் பகுதியில் பொறியாளர்கள் கே.ஆதிமூலம், செயலாளர் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை, எம்.தாணுமூர்த்தி, செயலாளர் கன்னியாகுமரி கிளை, வி.சிவப்பிரகாசம், பொருளாளர் தஞ்சாவூர் கிளை, வி. இரவிச்சந்திரன்,

பொருளாளர் இராமநாதபுரம் கிளை, சி.பி.மோகன்குமார், செயலாளர் மதுரை கிளை, ஏ.இராஜேந்திரன், உறுப்பினர் சேலம் கிளை, ஏ.திருவேங்கடமூர்த்தி, விதித்திருத்த பிரதிநிதி- 2, எஸ்.இராஜன்பிரேம்குமார், செயலாளர் கோயம்புத்தூர் கிளை, வி.பரமசிவம், செயலாளர் சிவகங்கை கிளை, எம்.சதாசிவம், துணைத் தலைவர் தேனி கிளை, சி.செல்லக்குமார், இணைச் செயலாளர் தேனி கிளை, வி.இராமகிருஷ்ணன், பொருளாளர் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை, சி.கணபதி, உறுப்பினர் திருவாரூர் - நாகை கிளை, கே.எல்.ஆரோக்கியசாமி, இணைச் செயலாளர் புதுக்கோட்டை கிளை, ஜி.பழனிசாமி, உறுப்பினர் திருச்சி கிளை, கே.ஆர்.ஜெயராமன், செயலாளர், திருச்சி கிளை ஆகியோர் தங்களின் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

மூத்தப் பொறியாளர்கள் ஆர்.வெங்கடசுப்பு, சி.ப.சண்முகம், ஏ.எம்.பாபு, T.P.பாலசுப்பிரமணியம், வே.வெங்கட்ராமன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மண்டலச் செயலாளர்கள் தங்கள் மண்டல செயல்பாடுகள் குறித்து பேசினார்கள்.

பேரவையின் மாநிலத் தலைவர் பொறியாளர் எம்.ஊர்க்காவலன் அவர்கள் உரையாற்றினார்.

நிதிச் செயலாளர் பொறியாளர் ஆ.நடராஜன் அவர்களால் 01.08.2013 முதல் 30.01.2014 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெறப்பட்டது.

பொங்கும் நிதிச் செயலாளர் பொறியாளர் என்.புண்ணியகோட்டி அவர்கள் 01.08.2013 முதல் 31.12.2013 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

வெளியீட்டுச் செயலாளர் பொறியாளர் எஸ்.கண்ணன் அவர்கள் பொறியியல் கதிர், நாட்சுவடி, நாட்காட்டி ஆகியவை குறித்து அவையில் எடுத்துரைத்தார்.

நூற்றாண்டு நிறைவு விழா குறித்து பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் பேசினார். மூத்தப் பொறியாளர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தார்கள்.

விருதுநகர் கிளை சார்பாக செயலாளர் பொறியாளர் எஸ்.இராமரத்தினம் அவர்களும், மையச் சங்கம் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் கே.கமால்தீன் அவர்களும் நன்றி கூற மையச் செயற்குழுக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

மையச் செயற்குழுக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்:**

1. நூற்றாண்டு நிறைவு விழா ஜீன் மாதம் முதல் அல்லது இரண்டாவது வாரம் நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

2. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பிறந்தநாள் பரிசாக 24.02.2006 அன்று அரசாணை எண்: 1ன் படி, தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்க பிறப்பிக்கப்பட்ட நிலுவை விதித்திருத்தம் (Pending Rule Amendment) படி உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற்றவர்களை பணிவரன் முறை (Regularisation) செய்ய அதிகாரிகளை வலியுறுத்த தீர்மானிக்கப்படுகிறது.

3. உச்சநீதி மன்றத்தில் அரசாணை எண்: 1 பொ.ப.து. நாள்: 02.01.1990 சம்பந்தமாக உள்ள வழக்கில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக உள்ள வழக்கறிஞரை மாற்றிவிட்டு புது வழக்கறிஞரை நியமிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

4. பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு நான்கு ஆண்டுகள் பணி முடித்த தேதியிலிருந்து தொழில் நுட்ப உதவியாளர் பதவி அளிக்க அரசை வலியுறுத்த தீர்மானிக்கப்படுகிறது.

5. உறுப்பினர்கள் முழு விபரங்களை (Complete Details) கிளைச்சங்கங்கள் 28.02.2014-க்குள் மையச் சங்கத்திற்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்படுகிறது.

6. தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு எதிரான செயல்படுபவர்களிடமிருந்து "பொறியியல் கதிர்" இதழுக்கான சந்தா தொகை பெறக்கூடாது என தீர்மானிக்கப்படுகிறது.

7. பிரிவுக்கு ஒரு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உருவாக்க அரசை வலியுறுத்த தீர்மானிக்கப்படுகிறது.

8. சென்னை பொறியியல் இல்லம் சர்வீஸ் கட்டணம் 01.03.2014 முதல் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்க தீர்மானிக்கப்படுகிறது.

| | பழைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|
| நன்கொடையாளர் | 75 | 100 |
| உறுப்பினர் | 100 | 150 |
| உறுப்பினர் அல்லாதோர் | 150 | 200 |









## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் தலைவர் பொறியாளர். V.அரசன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமணத்திற்காக ரூ. 1001 (ரூபாய் ஆயிரத்து ஒன்று) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர். D.C. வர்மா, உதவி செயற்பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமணத்திற்காக ரூ. 1001 (ரூபாய் ஆயிரத்து ஒன்று) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## மையச் சங்க பொறுப்பாளர்கள் உரையாற்றுகிறார்கள்













## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்










## மாநில செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்











## ABSTRACT

Establishment - Public Works Department - Tamil Nadu Engineering Service - Temporary list Assistant Engineers / Junir Engineers fit for promotion / appointment as Assistant Executive Engineers (Civil) for the year 2013 - 2014 - Approved - Appointment by promotion / recruitment by transfer as Assistant Executive Engineers (Civil) - Orders - Issued.

---

**PublicWorks (A2) Department**

**G.O.(2D) No.8** **Dated:07.02.2014**

**தை 24,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**Read:**

1. G.O.(2D) No.6, Public Works (A1)Department, Dated:05.02.2014.
2. From the Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region and Chief Engineer (General), Public Works Department Letter No. C1(3)/ 1220/2013, Dated:05.02.2014.
3. G.O.(2D) No.7. Public Works (A2) Department, Dated: 07.02.2014.

--------

**ORDER:**

The following Assistant Engineers / Junior Engineers are promoted / appointed as Assistant Executive Engineers (Civil) in Category 4 under ' Branch I - Public Works of the Tamil Nadu Engineering Service, on temporary basis under rule 39(a)(i) and 10(a)(i)(1) of the General Rules for the Tamil Nadu State and Subordinate Services, with effect from the date of their assumption of charge of the post, subject to the conditions stipulated in para 5 of the Government Order first read above:-

| Sl.No. | Names (Tvl. / Tmt.) | Designation |
|---|---|---|
| 1. | N.Bojiah | Assistant Engineer |
| 2. | P.Gunasekaran | Assistant Engineer |
| 3. | P.Kalaichelvan | Junior Engineer |
| 4. | M.Balamohanamurugan | Assistant Engineer |
| 5 | V.Senthilkumar | Assistant Engineer |
| 6. | V.C.Prabakar | Assistant Engineer |
| 7. | J.Jayapaul Mohan | Junior Engineer |
| 8. | S.Velanantharaj | Assistant Engineer |

| Sl.No. | Names (Tvl. / Tmt.) | Designation |
|---|---|---|
| 9. | K.Kamaldheen | Assistant Engineer |
| 10. | M.Ramakrishnan | Assistant Engineer |
| 11. | A.Subramanian | Junior Engineer |
| 12. | R.Padmanaban | Assistant Engineer |
| 13. | K.C.Anandaraj Umapathy | Assistant Engineer |
| 14. | T.Shanmugavel | Assistant Engineer |
| 15. | B.Bala Subramanian | Junior Engineer |
| 16. | P.Vadivel | Assistant Engineer |
| 17. | P.Thirumoorthy | Assistant Engineer |
| 18. | P.Rajendra Prasad | Assistant Engineer |
| 19. | P.Tamil Selvam | Junior Engineer |
| 20. | V.Velmurugan | Assistant Engineer |
| 21. | D.John | Assistant Engineer |
| 22. | M.Akilandeswari | Assistant Engineer |
| 23. | S.Kathiravan | Junior Engineer |
| 24. | R.Arunmozhi | Assistant Engineer |
| 25. | S.Gayathri | Assistant Engineer |
| 26. | T.Suganthi | Assistant Engineer |
| 27. | C.Kannan | Junior Engineer |
| 28. | R.Manivannan | Assistant Engineer |
| 29. | R.Bhuvaneswari | Assistant Engineer |
| 30. | P.N.S.Mahesh Babu | Assistant Engineer |
| 31. | K.S.Ravichandran | Junior Engineer |
| 32. | G.Anbarasan | Assistant Engineer |
| 33. | P.Selvaraju | Assistant Engineer |
| 34. | A.Abdulla Khaiser | Assistant Engineer |
| 35. | S.Dossyus | Junior Engineer |
| 36. | Joseph E.Runsteadt Perez | Assistant Engineer |
| 37. | N.Suresh Babu | Assistant Engineer |
| 38. | P.Santhi (18.05.1967) | Assistant Engineer |
| 39. | S.Subbaiah | Junior Engineer |
| 40. | K.Soundaram | Assistant Engineer |
| 41. | M.Pandiyan | Assistant Engineer |
| 42. | K.Vani | Assistant Engineer |
| 43. | K.M.Shanmugam | Junior Engineer |
| 44. | A.Sivakumar | Assistant Engineer |
| 45. | V.Senthur | Assistant Engineer |

| Sl.No. | Names (Tvl. / Tmt.) | Designation |
|---|---|---|
| 46. | N.Karthigaibalan | Assistant Engineer |
| 47. | G.Nagarethinam | Junior Engineer |
| 48. | V.Suganthi | Assistant Engineer |
| 49. | T.Shanmugasundaram | Assistant Engineer |
| 50. | P.Gomathinayagam | Assistant Engineer |
| 51. | R.Karthikeyan | Junior Engineer |
| 52. | B.Subramanian | Assistant Engineer |
| 53. | M.Vasanthi | Assistant Engineer |
| 54. | R.Durga | Assistant Engineer |
| 55. | V.Nattar | Junior Engineer |
| 56. | A.Murugesan | Assistant Engineer |
| 57. | P.Shanthi (24.05.1965) | Assistant Engineer |
| 58. | K.Mathimani | Assistant Engineer |
| 59. | K.Ramamoorthi | Junior Engineer |
| 60. | B.Arulson Bright | Assistant Engineer |
| 61. | K.Gowthaman | Assistant Engineer |
| 62. | K.Alagirisamy | Assistant Engineer |
| 63. | M.Logaguru | Junior Engineer |
| 64. | T.Tirupurasundari | Assistant Engineer |
| 65. | D.Chandrasekar | Assistant Engineer |
| 66. | V.Vidhya | Assistant Engineer |
| 67. | S.Karthikeyan | Junior Engineer |
| 68. | S.Thangavel | Assistant Engineer |
| 69. | A.Balamurugan | Assistant Engineer |
| 70. | M.Maheswari | Assistant Engineer |
| 71. | M.Gopalakrishnan | Junior Engineer |
| 72. | N.Ramesh | Assistant Engineer |
| 73. | J.Seenivasagan | Assistant Engineer |
| 74. | B.Kavitha | Assistant Engineer |
| 75. | K.Tharuman | Junior Engineer |
| 76. | K.Jothibasu | Assistant Engineer |
| 77. | R.Sankar | Assistant Engineer |
| 78. | R.Seenivasan | Assistant Engineer |
| 79. | N.Sivakumar | Junior Engineer |
| 80. | S.Thangarajan | Assistant Engineer |
| 81. | J.Arul Panneer Selvam | Assistant Engineer |
| 82. | K.Krishnaveni | Assistant Engineer |

| Sl.No. | Names (Tvl. / Tmt.) | Designation |
|---|---|---|
| 83. | M.Ramaiah | Junior Engineer |
| 84. | S.Marimuthu | Assistant Engineer |
| 85. | S.Saravanan | Assistant Engineer |
| 86. | S.K.Jayaprakash | Assistant Engineer |
| 87. | B.Bagavathi | Junior Engineer |
| 88. | K.Rathinavel | Assistant Engineer |
| 89. | T.Nagavelu | Assistant Engineer |
| 90. | R.Venkatachalam | Assistant Engineer |
| 91. | S.Pandiaraj | Junior Engineer |
| 92. | V.Santhi (09.08.1973) | Assistant Engineer |
| 93. | M.Balu | Assistant Engineer |
| 94. | H.Yogapriya | Assistant Engineer |
| 95. | N.Murugesan | Junior Engineer |
| 96. | C.Geethalatha | Assistant Engineer |
| 97. | V.Sridharan | Assistant Engineer |
| 98. | V.Thalasadaya Neelmudiyon | Assistant Engineer |
| 99. | C.Selvaraj | Junior Engineer |
| 100. | K.Subbiah | Assistant Engineer |
| 101. | K.Vijayakumar | Assistant Engineer |
| 102. | D.S.Arulkovan | Assistant Engineer |
| 103. | R.Veeramuthu | Junior Engineer |
| 104. | K.Jayachitra | Assistant Engineer |
| 105. | M.Mohanasundaram | Assistant Engineer |
| 106. | P.Pugalendhi | Assistant Engineer |
| 107. | S.Nataraja Rathinam | Junior Engineer |
| 108. | S.Gandhimathi | Assistant Engineer |
| 109. | K.Murali | Assistant Engineer |
| 110. | R.Singaravel | Assistant Engineer |
| 111. | S.Arjunan | Junior Engineer |
| 112. | R.Prabu | Assistant Engineer |
| 113. | C.Ravichandran | Assistant Engineer |
| 114. | S.Viswanathan | Assistant Engineer |
| 115. | S.Palani | Junior Engineer |
| 116. | S.Selvi | Assistant Engineer |
| 117. | S.Kulanthaiyan | Assistant Engineer |
| 118. | J.Banu | Assistant Engineer |
| 119. | B.Ramasubramanian | Junior Engineer |

| Sl.No. | Names (Tvl. / Tmt.) | Designation |
|---|---|---|
| 120. | M.Niraimathy | Assistant Engineer |
| 121. | T.Kuruthivelmaran | Assistant Engineer |
| 122. | C.Manikandarajan | Assistant Engineer |
| 123. | S.Kalarani | Junior Engineer |
| 124. | S.Sankarraj | Assistant Engineer |
| 125. | S.Manikandan | Assistant Engineer |
| 126. | R.Subramanian | Assistant Engineer |
| 127. | P.Mohan | Junior Engineer |
| 128. | T.Saravanan | Assistant Engineer |
| 129. | R.Venkatesh | Assistant Engineer |
| 130. | G.Leela | Assistant Engineer |
| 131. | R.Vedamoorthy | Junior Engineer |
| 132. | J.Arulneriselvan | Assistant Engineer |
| 133. | V.Meera | Assistant Engineer |
| 134. | P.Shiyamaladevi | Assistant Engineer |
| 135. | R.Susithra | Junior Engineer |
| 136. | V.Sankar | Assistant Engineer |
| 137. | S.Meenurenukadevi | Assistant Engineer |
| 138. | M.Jayasudha | Assistant Engineer |
| 139. | K.Sathar | Junior Engineer |
| 140. | G.Karthikeyan | Assistant Engineer |
| 141. | T.Devaraj | Assistant Engineer. |
| 142. | M.Kuzhali | Assistant Engineer |
| 143. | P.S.Syed Habeeb | Junior Engineer |
| 144. | B.Ashokbabu | Assistant Engineer |
| 145. | S.Malajayalakshmi | Assistant Engineer |
| 146. | M.Baskaran | Assistant Engineer |
| 147. | M.K.Manickam | Junior Engineer |
| 148. | M.S.Hemalatha | Assistant Engineer |
| 149. | G.Azam Basha | Assistant Engineer |
| 150. | R.Kala | Assistant Engineer |
| 151. | P.Nagaraju | Junior Engineer |
| 152. | P.Neelakannan | Assistant Engineer |
| 153. | R.Selvarajan | Assistant Engineer |
| 154. | P.Suresh Kumar | Assistant Engineer |
| 155. | A.David Anbalagan | Junior Engineer |
| 156. | K.R.Suja | Assistant Engineer |

| Sl.No. | Names (Tvl. / Tmt.) | Designation |
|---|---|---|
| 157. | R.Govindarasu | Assistant Engineer |
| 158. | N.Jeyamathi | Assistant Engineer |
| 159. | S.Selvamani | Junior Engineer |
| 160. | N.Jasmin Rejula | Assistant Engineer |
| 161. | R.Muruganandam | Assistant Engineer |
| 162. | T.N.Prabhakaran | Assistant Engineer |
| 163. | K.Sugumaran | Junior Engineer |
| 164. | S.Ramesh | Assistant Engineer |
| 165. | S.Selvan | Assistant Engineer |
| 166. | S.Rameshkumar | Assistant Engineer |
| 167. | S.Rajagopalan | Junior Engineer |
| 168. | M.C.Murugesan | Assistant Engineer |
| 169. | A.Ayyavu | Assistant Engineer |

2. It is certified that the individuals mentioned in para 1 above are fully qualified to hold the post of Assistant Executive Engineer for the purpose of fixation of their pay in the said higher post.

(By order of the Governor)

M.Sai Kumar,
Secretary to Government.

## பிப்ரவரி 2014 மாத பொறியாளர் இதழில் இருந்து

**பொள்ளாச்சி கிளை - பொறியாளர் சங்கம்**

பொதுப்பணித்துறை இளநிலை மின் பொறியாளர்கள் உச்சநீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில் Redesignated உதவிப் பொறியாளர்கள் அவர்களுக்குரிய 25 சதவீத ஒதுக்கீடு (Subordinate Service) மூலம் மட்டுமே பதவி உயர்வு உரிமை கோர முடியும் என்றும் TNPSC உதவிப் பொறியாளர்களின் (State Service) 75 சதவீத ஒதுக்கீட்டில் பதவி உயர்வு கோர உரிமை இல்லை எனவும், இவ்வாறு எந்த ஒரு பணிவிதியும் இல்லாமல் இதுவரை இரண்டு ஒதுக்கீட்டிலும் பதவி உயர்வு வழங்கியிருப்பது சட்டப்படி தவறு என உச்சநீதிமன்றம் கருத்து கூறியுள்ள நிலையில், இனி வரும் காலங்களில் மேற்கண்ட தீர்ப்பின் அடிப்படையில் 33 சதவீத ஒதுக்கீட்டில் மட்டுமே நீர்வள ஆதாரத்துறை மற்றும் கட்டிடப் பிரிவில் உள்ள Redesignated உதவிப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். எனவே இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க தலைமை சங்கத்தினை கோருவது என தீர்மானிக்கப்பட்டது.

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்,
தலைமைப் பொறியாளர் (பொது) பொபது, சேப்பாக்கம்,
சென்னை - 5.

**ஐயா,**

**பொருள்** : நிறுவனம் - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி - பொறியியல் பட்டம் பெற்ற தொழில்நுட்ப உதவியாளர்கள் உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை - சம்பந்தமாக.

**பார்வை** : 1. அரசு ஆணை நிலை எண்: 1 பொதுப்பணித்துறை நாள்: 02.01.1990.2.
2. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும், தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., க.எண் எஸ் 2 (2) / 56832 / 03 / நாள்: 15.12.2003.3.
3. அரசு கடித எண்: 26642 / பி2 / 2003 - 10 / நாள்: 24.02.2006.4.
4. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும், தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., கடித எண் எஸ் 2 (2) / 29148 / 2004 / 14 நாள்:27.02.2006.5.
5. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும், தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., கடித எண் எஸ் 2 (2) / 29148 / 2004 / நாள்:18.10.2007.6.
6. எங்கள் சங்கத்தின் பல்வேறு கடிதங்கள்.

பார்வை 1ல் கண்டுள்ள அரசாணையில் ஐந்து வருடம் பணி புரிந்த தொழில்நுட்ப உதவியாளர்கள் பட்டபடிப்பை முடித்திருந்தால் உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பெற தகுதி உடையவர்கள் என அரசு ஆணையிட்டுள்ளது.

அதன்படி இத்துறையில் உள்ள தகுதிபெற்ற பல்வேறு தொழில்நுட்ப உதவியாளர்கள் உதவிப் பொறியாளர்கள் பதவி உயர்வு வழங்குமாறு கோரி வந்தனர். பார்வை 1ல் கண்டுள்ள அரசாணைக்கு விதி திருத்தம் (Amendment) இல்லாததால் பதவி உயர்வு வழங்க இயலாது என முதன்மை தலைமைப் பொறியாளர் தெரிவித்திருந்தனர்.

**அரசு ஆணைகளுக்கு விதித்திருத்தம் வழங்கப்பட வேண்டியது தானாக நடைபெற வேண்டிய செயல். ஆனால் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் விதித்திருத்தம் (Rule Amendment) தாமதப்படுத்தப்பட்டுள்ளது.**

இது சம்பந்தமாக தமிழ்நாடு பொறியியல் சங்கம் தகுதிபெற்ற தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி வழங்குமாறு கோரி வந்தது.

ஆனால், பகுதி நேர பட்டப்படிப்பு படித்த தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி வழங்க அரசு ஆணை இருந்தும் விதித்திருத்தம் இல்லை என்ற காரணம் காட்டி அவர்களுக்கு இளநிலை பொறியாளர் பதவி வழங்கப்பட்டது.

பார்வை 2ல் கண்டுள்ள முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் பொபது., அவர்களின் கடிதத்தில் பொறியியல், சிறப்பு விதிகளுக்கு திருத்தம் நிலுவையில் உள்ள நிலையில் பொதுப்பணித்துறையில் உள்ள தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக பணி மாற்றம் செய்ய முடியவில்லை என்றும், மேலும், தற்போது இளம் பொறியாளர்களாக பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளர்களை உதவிப் பொறியாளர்களாக முன்தேதியிட்டு பணியமர்த்துவது குறித்து அரசு அளவில் முடிவெடுத்து ஆணை வழங்குமாறு கோரப்பட்டதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களின் அரசு, பார்வை 3ல் கண்ட கடிதத்தில் தமிழ்நாடு பொறியியல் பணி மற்றும் தமிழ்நாடு பொறியியல் சார்நிலை பணிகளுக்கான சிறப்பு விதிகளுக்கு நிலுவை விதி திருத்தம் வழங்கி தொழில்நுட்ப உதவியாளர், பதவியிலிருந்து பட்டப்படிப்பு பெற்ற தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் இளம் பொறியாளர்களாக பணியமர்த்தப்பட்டவர்களுக்கு உதவிப் பொறியாளர் பணி வழங்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டது.

**இந்த நிலுவை விதித்திருத்த ஆணை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பிறந்த நாள் அன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பிறந்த நாள் பரிசாக வழங்கப்பட்டது.**

அதன்படி தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் நியமனம் வழங்கியும், பி.இ., பட்டப்படிப்புடன் தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து ஏற்கனவே இளநிலைப் பொறியாளர் பதவி வழங்கப்பட்டவர்களுக்கு உதவிப் பொறியாளர் நியமனம் 2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கட்டுபாட்டில் உள்ள பிறதுறைகளில் இதே அரசாணையின்படி உதவிப் பொறியாளர்கள் பதவி வழங்கப்பட்டு பணிவரன்முறை செய்யப்பட்டு பல்வேறு பதவி உயர்வுகள் பெற்று பணிபுரிந்து வருகின்றனர் என்பதை பணிந்து தெரிவித்து கொள்கிறோம்.

**ஆனால் பொதுப்பணித்துறையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களின் ஆணைப்படி 2006ம் ஆண்டில் நியமனம் வழங்கப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு சுமார் 7 வருடங்கள் ஆகியும் பணிவரன் முறை செய்யப்படவில்லை. இவர்களில் சிலர் பணி ஓய்வு பெற்றுவிட்டனர். பலர் சுமார் 54 வயதை கடந்தவர்கள் ஆவர்.**

பார்வை 3ல் கண்ட அரசு கடிதத்தில் உதவிப் பொறியாளர் பதவி பெற தகுதி இருந்து உதவிப் பொறியாளர் பதவி தரப்படாமல் இளநிலை பொறியாளர் பதவி அளிக்கப்பட்டவர்களுக்கு முன் தேதியிட்டு உதவிப் பொறியாளர் பதவி அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது. ஆனால் அந்த ஆணையை முழுமையாக அமுல்படுத்தாமல் மேற்கண்ட இளநிலை பொறியாளர்களுக்கு 24.02.2006 முதல் உதவிப் பொறியாளர் பதவி அளிக்கப்பட்டது. இது அரசின் ஆணையை மீறிய ஒரு செயலாகும். இருந்தாலும் 24.02.2006ல் இருந்து முதன்மை தலைமைப் பொறியாளரால் வழங்கப்பட்ட ஆணையின் படி பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களை பணிவரன்முறை செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். எனவே, மேற்கண்ட இளநிலை பொறியாளர்களுக்கு 2003ம் ஆண்டு முதல் அவரவர்கள் இளநிலை பொறியாளர் பதவி பெற்ற தேதியில் இருந்து அவர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி முன் தேதியிட்டு வழங்கி அவர்களை பணிவரன் முறை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

(த.முருகேசன்)
பொது செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சென்னை - 5.

---

பெறுநர்,

முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்),
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை மண்டலம்,
தலைமைப் பொறியாளர் (பொது) பொபது, சேப்பாக்கம்,
சென்னை - 5.

ஐயா,

பொருள்: பொதுப்பணித்துறை - உதவி செயற்பொறியாளர் - பதவி உயர்வு பட்டியலில் உள்ளவர்கள் பணி ஓய்வு - மறுபணி அமர்வு ஆணை வழங்க கோருதல் - சம்பந்தமாக.

பார்வை: அரசு ஆணை எண்:(2டி) எண்:8 பொ.ப. (ஏ2) துறை,நாள்: 07.02.2014.

பார்வையில் கண்டுள்ள அரசாணையில் 169 உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இதில் முதுநிலை வரிசை எண்: 155 மற்றும் 167ல் பொறியாளர்கள் A.டேவிட் அன்பழகன், S.ராஜகோபாலன் ஆகியோர் உள்ளனர். இவர்கள் இருவரும் 30.04.2014 அன்று ஓய்வு பெற இருக்கிறார்கள். இவர்கள் துறையில் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி இந்த பதவி உயர்வை எதிர்நோக்கியுள்ளார்கள். எனவே அவர்களுக்கு மறுபணி அமர்வு ஆணை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(த.முருகேசன்)
பொது செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சென்னை - 5.

# இயங்கும் உலகம்

## இராமநாதபுரம் கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், இராமநாதபுரம் கிளையின் 2014-ம் ஆண்டு புத்தாண்டு பொதுக்குழுக் கூட்டம் 03.01.2014 அன்று மாலை 6.00 மணியளவில் பரமக்குடியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கிளைத்தலைவர் பொறி.S.கிருஷ்ணன் அவர்கள் தலைமை ஏற்றார். துணைத் தலைவர் பொறி.K.குருசாமி அவர்கள் வரவேற்றார். கிளைச் செயலாளர் பொறி. P. தமிழ்ச்செல்வம் அவர்கள் கிளைச்சங்க நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். பொருளாளர். பொறி.V.இரவிச்சந்திரன் அவர்கள் கிளை வரவு செலவு குறித்து பேசினார். பின்னர் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட பொறி.S.லீலாவதி, மைய மண்டலச் செயலாளர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். மாநில துணைத் தலைவர் பொறி.M.பஞ்சவர்ணம் அவர்கள் மையச்சங்க நடவடிக்கைகள் குறித்து உறுப்பினர்கள் திருப்தியடையும் வகையில் நீண்டதொரு நல்லுரை ஆற்றினார்கள். பின் கிளை உறுப்பினர்கள் பொறியாளர்கள். திரு.J.இரவீந்திரன், திரு.G.இரமேஷ்குமார் ஆகியோர் தங்களது கருத்துக்களை தெரிவித்தார்கள். இறுதியாக கிளை இணைச் செயலாளர் திரு.C.சந்திரசேகரன் அவர்கள் நன்றி நவில இக்கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**தீர்மானங்கள்:**

1. பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளரை நியமித்திட நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.
2. உதவிப்பொறியாளருக்கு இணையான சம்பளத்தை இளம் பொறியாளருக்கும் பெற்றுத்தர வேண்டுகிறது.
3. இளம் பொறியாளர்களை பணிவரன்முறை படுத்த துரித நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை இக்குழு கேட்டுக்கொள்கிறது.
4. தமிழ்நாடு பொறியியல் சங்க நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்திட இக்கிளை தனது முழு ஒத்துழைப்பை நல்கும் என தீர்மானிக்கப்பட்டது.

## கன்னியாகுமரி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளையின் பொதுக்குழு கூட்டம் 31.12.2013 அன்று தியாகி.M.A. கோல்டுவின் இம்மானுவேல் அரங்கில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தின் தலைவராக கிளை தலைவர் பொறி.P.சசிகுமார் பொறுப்பேற்றார். கிளையின் உபதலைவர் பொறி.S.இரத்தினசாமி அவர்கள் முன்னிலை வகித்தார். தலைவர் P.சசிகுமார்அவர்கள் அனைவரையும் வரவேற்று தலைமையுரையும் ஆற்றினார். செயலாளர் பொறி.M.தாணுமூர்த்தி அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து பேசினார். சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட மைய சங்க துணை தலைவர் பொறி.M.பஞ்சவர்ணம் மற்றும் பொறி.P.முத்துசாமி (தென் மண்டல செயலாளர்) ஆகியோர்கள் சங்க நடவடிக்கைகள் மற்றும் நூற்றாண்டு விழா குறித்து விரிவாக எடுத்துரைத்தார்கள். உறுப்பினர்களில் மகளிர்

உறுப்பினர்கள் அதிகம் கலந்து கொண்டது சிறப்பம்சமாகும். உறுப்பினர்களுக்கு 2014ம் ஆண்டு கையேடு மற்றும் நாட்சுவடி வழங்கப்பட்டது. கிளை உறுப்பினர் பொறியாளர் S.ஜெயக்குமார் நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது.

**கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:**

1. பணி ஆய்வாளர்களாக பணிபுரியும் பட்டய பொறியாளர்களுக்கு உடனடியாக தொழில்நுட்ப உதவியாளர் பதவியை பெற்று தருதல்.
2. பணிஆய்வாளர் பதவியில் நான்கு ஆண்டுகள் பணி முடித்த தேதியிலிருந்து முன்தேதியிட்டு தொழில்நுட்ப உதவியாளர் பதவியை பெற்று தருதல்.
3. மின் கம்பியாளர் பதவியில் இருப்பவர்களுக்கு மின்னியல் துறையில் காலியாக இருக்கும் தொழில்நுட்ப உதவியாளர் பதவியை பெற்று தருதல்.
4. அரசாணை எண்.1ன் படி உதவி பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பணிவரன் முறை பெற்று தருதல்.
5. 1987ல் பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் இளநிலைப் பொறியாளர்களாக பணியமர்வு செய்யப்பட்டவர்களின் பணியிடை காலத்தை களைந்து முதுநிலை பட்டியல் தயாரித்து உடனடியாக உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்று தருதல்
6. இளநிலை பொறியாளர்களின் ஊதிய முரண்பாட்டை களைந்து நியாயமான ஊதியம் பெற்று தருதல்.

# பொங்கும் நிதி

**அன்பார்ந்த பொறியாளர் நண்பர்களே வணக்கம்.**

பொங்கும் நிதியில் (பொறியாளர் குடும்ப நல நிதி திட்டம்) புதியதாக உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டவர்கள் விவரம்.

**ஆகஸ்ட் 2013**

1. 830 - M. மூர்த்தி, பணி ஆய்வாளர், திண்டுக்கல் கிளை.
2. 831 - S. கிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர், இராமநாதபுரம் கிளை.
3. 832 - K. இராமமூர்த்தி, இளம் பொறியாளர், இராமநாதபுரம் கிளை.
4. 833 - C. சந்திரசேகரன், இளம் பொறியாளர், இராமநாதபுரம் கிளை.
5. 834 - N. பத்மினி, பணி ஆய்வாளர், இராமநாதபுரம் கிளை.
6. 835 - T.S. பிரபாகரன், உதவிப் பொறியாளர், மதுரை கிளை.

**பிப்ரவரி 2014**

1. 836 - R. மகாலிங்கம், உதவி பொறியாளர், இராமநாதபுரம் கிளை.
2. 837 - J. இரவீந்திரன், இளம் பொறியாளர், இராமநாதபுரம் கிளை.

ஓய்வு பெறும் உறுப்பினர்கள் கூடுதலாகவும், புதிய உறுப்பினர்கள் குறைவாகவும் உள்ளதால் பொங்கும் நிதி வளர்ச்சி குறைய வாய்ப்பு உள்ளது. எனவே பொங்கும் நிதியில் உறுப்பினர்களாக இதுவரையில் இணைத்துக் கொள்ளாதவர்கள் உடன் உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டு பயன் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறேன். மேலும், ஓய்வு பெற்ற பொறியாளர்களில் இன்னும் ஒரு சில பொறியாளர்கள் பொங்கும் நிதி மூலச் சான்றிதழ்கள், முன் ஒப்புகை ரசீது, தொடர்ந்து மூன்று ஆண்டுகள் உறுப்பினர் கட்டணம் செலுத்தியுள்ள விபரம் குறித்த சான்று மற்றும் பரிந்துரையுடன் மையச் சங்கத்திற்கு அனுப்பி உரிய தொகையினை பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வரும் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஓய்வு பெறவுள்ள பொங்கும்நிதி உறுப்பினர்கள் பட்டியலை கீழே கொடுத்துள்ளேன். கிளைப் பொறுப்பாளர்கள் ஓய்வு பெறும் உறுப்பினர்களிடமிருந்து உரிய விண்ணப்ப படிவம், பொங்கும் நிதி மூலச் சான்றிதழ், முன் ஒப்புகை ரசீது முதலியவற்றை பெற்று தொடர்ந்து மூன்று ஆண்டுகள் உறுப்பினர் கட்டணம் செலுத்திய சான்று மற்றும் பரிந்துரைகளுடன் முன்னதாக மையச் சங்கத்திற்கு அனுப்ப கோருகின்றேன்.

**பிப்ரவரி 2014**

1. M. பக்கிரிசாமி
2. M. சம்பத்

**மார்ச் 2014**

1. K. சண்முகம்
2. S. குருநாதன்

**ஏப்ரல் 2014**

1. R. பாலசுப்ரமணியன்
2. A. ஷாஜஹன்
3. S. ராஜகோபாலன்
4. M. நடராஜன்
5. D. முரளிதரன்

கிளைப் பொறுப்பாளர்கள் தங்கள் கிளைகளில் உள்ள ஓய்வு பெற்ற உறுப்பினர்களிடமிருந்து மூலச் சான்றிதழ்கள் கிடைக்கப் பெறாவிட்டால் கீழ்கண்ட சான்றினை பத்து ரூபாய் முத்திரை தாளில் எழுதி உறுப்பினர் கையொப்பம் பெற்று விண்ணப்ப படிவம் மற்றும் முன் ஒப்புகை சான்றுடன் மையச் சங்கத்திற்கு அனுப்ப வேண்டுகிறேன்.

"எனக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கத்தால் வழங்கப்பட்ட பொங்கும் நிதி முதல் கட்டம் எண்............ இரண்டாம் கட்டம் அ/ஆ எண் ............. எங்கோ கை தவறுதலாக வைத்துவிட்டேன். நான் ........ல் ஓய்வு பெற்றேன். தற்போது தேடிய பொழுது எனது சான்றிதழ் கிடைக்கப் பெறவில்லை. பின்னர் கிடைத்தால் அவைகளை சங்கத்திற்கு அனுப்பி வைக்கின்றேன். அப்பொழுது இது தொடர்பாக எவ்வித கோரிக்கையும் வைக்க மாட்டேன். எனவே, எனது இந்த உறுதிமொழியை ஏற்று பொங்கும் நிதி விதிகளின் படி உரிய தொகையை எனக்கு அளிக்க கோருகிறேன்.

உறுப்பினர் கையொப்பம்

பொங்கும் நிதியில் சேர்ந்து ஓய்வுப் பெற்ற ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களது தொகையினை பெற்று பயன் பெறுவதற்கு மேற்கண்ட உறுதிமொழி அளிக்குமாறு மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன்.

"இத்திட்டத்தில் சேராதவர் ஒருவருமில்லை:" என்ற நிலையினை உருவாக்கி தருமாறு அனைத்து கிளைப் பொறுப்பாளர்களையும் அன்புடன் வேண்டுகின்றேன்.

அன்புடன்,
நா.புண்ணியகோட்டி
பொங்கும் நிதி செயலாளர்

Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14 MARCH 2014
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

## தமிழக அரசுக்கு தவறான, பொய்யான தகவல்கள் அளிக்கும் பொறியாளர் சங்கத்தை வன்மையாக கண்டிக்கிறோம்

2014 ஜனவரி பொறியாளர் இதழில் பக்கம் 29ல் அரசுக்கு பொறியாளர் சங்கம் அளித்துள்ள கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"எங்களுக்குக் கீழ் பணியாற்றும் வரைவாளர்கள் (Draughting Officers) / இளநிலைப் பொறியாளர்கள் (Junior Engineers) ஒப்பிட்டு பட்ட பொறியாளர்களாகிய எங்கள் சம்பளத்தைக் குறைத்துப் பரிந்துரை செய்யபப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது எங்களுக்கு மிகவும் வருத்தத்தினை தருகிறது."

இது அப்பட்டமான, அராஜகமான பொய் தகவலாகும் விதிகளில் **(Rules)** உள்ளதையே பொய்யாக மாற்றி எழுதியிருக்கும் பொறியாளர் சங்கத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

- தமிழ்நாடு பொறியியல் சங்கம்.

**நமது சங்கத்தின் Website : www. tnengga. org**
**email id : tneapwd@yahoo.co.in**

தந்தி: பொறியாளர்
தொலைபேசி: சங்கம்: 28525786
இல்லம்: 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை – 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 3.3.2014
Posting on 5.3.2014
REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY: **Er. D. MURUGESAN,** D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: **Er. S. KANNAN,** D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. **K.P.THIYAGARAJAN** AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5 PHONE 2854 8223